விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27

ஒலி 064 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 09 சனிக்கிழமை (21.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்.பல்கலைப் பட்டமளிப்பு
## வணிகத்துறை மாணவிக்கு 7 தங்கப் பதக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் 7 தங்கப் பதக்கங்களைப் பெற்று வணிகத்துறை மாணவி

15ஆம் பக்கம் பார்க்க




## காரைநகர் - ஊர்காவற்றுறை இடையே பாலம் அமைக்க நடவடிக்கை

### அமைச்சர் அநுர கருணாதிலக்க

(யாழ்ப்பாணம்)

காரைநகர் - ஊர்காவற்றுறை இடையே பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.


ஊர்காவற்றுறை துறைமுகம் மற்றும் கப்பல் பழுது பார்க்கும்

15ஆம் பக்கம் பார்க்க



# இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும்

### புதுடில்லியில் ஜனாதிபதி அநுரவிடம் மோடி நேரில் தெரிவிப்பு



(புதுடில்லி)

இலங்கையின் இறையாண்மை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கும் என ஜனாதிபதி அநுரவிடம் இந்தியப் பிரதமர் மோடி நேரில் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானைச் சூழும் போர் மேகங்கள்

### ட்ரம்ப் விதித்த கடைசிக் கெடு

(வாஷிங்டன்)

அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையில் ஈரான் சரியான ஒப்பந்தத்தை எட்டத் தவறினால், அந்த நாடு மிக

02ஆம் பக்கம் பார்க்க

## கே.கே.எஸ் துறைமுகத்தின் அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர் குழு ஆய்வு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை துறைமுகத்தின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

அதற்காக துறைமுகங்

04ஆம் பக்கம் பார்க்க

## 'சமஷ்டி' அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும்

### இந்தியப் பிரதிநிதியிடம் முன்னணி வலியுறுத்து




(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற 'சமஷ்டி' அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும்.

04ஆம் பக்கம் பார்க்க

## இந்திய முதலீட்டாளர்களை வடக்கில் முதலிட நடவடிக்கை

### ஆளுநரிடம் இந்திய தூதுவர் உறுதி



(யாழ்ப்பாணம்)

இந்திய முதலீட்டாளர்களை வட மாகாணத்தில் முதலீடு செய்ய நடவடிக்கை

04ஆம் பக்கம் பார்க்க

### கல்லுண்டாய் மக்களுக்கு
## நிரந்தரத் தீர்வு வழுங்குவது தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் கல்லுண்டாய் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கும் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கிலான விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடை

15ஆம் பக்கம் பார்க்க

## மரணச்சடங்குக்கு வெடி கொளுத்த ரூ.10 ஆயிரம் கட்டணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குள் இடம்பெறும் மரணச் சடங்கிற்கு வீதியில்வெடிகளைக் கொளுத்த வேண்டுமாக

04ஆம் பக்கம் பார்க்க

### பயங்கரவாதச் சட்டம் வேண்டாம்
## சந்நிதி ஆலய முன்றலில் கையெழுத்துப் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா [illegible] காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு

- சமையல் உதவியாளர்
- பணியாளர் (Waiter)
- பாத்திரம் சுத்தப்படுத்துபவர்(Dish Washer)

(C-5029)

தேவை ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

தொடர்பு: 075 049 2719



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் இலந்தைக்குளம் வீதியில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- மாம்பழச்சந்தியிலிருந்து 350m தூரம்
- ஒரு பரப்பின் விலை :- 48 இலட்சம்

(2070)

076 860 2770, 076 987 8617


## ஈரானைச் ...

மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அதிரடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்களைக் கைவிடக்கோரி இரு நாடுகளுக்கும் இடையே ஜெனீவாவில் பதற்றமான சூழலில் பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் நிலையில், ட்ரம்பின் இந்த அறிவிப்பு சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வாஷிங்டனில் நடைபெற்ற தனது அமைதி வாரியத்தின் தொடக்கக் கூட்டத்தில் பேசிய அதிபர் ட்ரம்ப், ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எளிதான காரியம் அல்ல. ஆனால், ஒரு நியாயமான ஒப்பந் தத்தை நாம் செய்தாக வேண்டும். இல்லையென்றால், ஈரான் மிக மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்டார்.

ஈரான் தற்போது ஓமன் வளை குடாவில் ரஷ்யாவுடன் இணைந்து கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வரும் நிலையில், அமெரிக்கா எந்நேரமும் ஈரான் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் சூழல் உருவாகியுள் ளதால், உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயரும் அபாய மும் அதிகரித்துள்ளது. (ம-7)


### A/L PHYSICS CLASS

தனிப்பட்ட. குழு வகுப்புகளுக்கும் வீடு வந்தும் கற்பிக்கப்படும். ஒருவர் தங்கிப் படிக்க இடமுண்டு.

(6880)

Ranjit Sir
(B.sc, P.G.D.E, S.L.P.S-1)

தொடர்புகளுக்கு:
077 600 4896


## தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கொடிகாமம்

### பணி நிலை வெற்றிடம்

எமது சங்கத்தின் கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பதவிகள் – சம்பள அளவுத்திட்டம் 2/2025 (1) இன் படி

| | | |
|---|---|---|
| 01. களஞ்சிய முகாமையாளர் | 208/13 | 33360-520x10-580x10-740x10- 51760<br>வெற்றிடம் :- 02 |
| 02. விற்பனை உதவியாளர் | 308/16 | 31975-390x10-490x10-650x10- 47275<br>வெற்றிடம் :- 03 |
| 03. காவலாளி | 315/16 | 31975-390x10-490x10-650x10- 47275<br>வெற்றிடம் :- 02 |

### தகைமைகள் – (சுற்று நிரூபம் 01/2021)

#### களஞ்சிய முகாமையாளர் 208/13

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

#### விற்பனை உதவியாளர் 308/16

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் விற்பனை உதவியாளர் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ்மொழி, கணிதம் என்பவற்றை உள்ளடக்கி 06 பாடங்களுடனான சித்தி.

#### காவலாளி 315/16

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

#### நிபந்தனைகள்

01. வயதெல்லை 18-45 இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
02. கூட்டுறவுச் சங்கத்தில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும்.
03. விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக கல்வி தகைமைச் சான்றிதழ், மேலதிக துறைசார் சேவைச் சான்றிதழ், சமூக நலன் செயற்பாடுகளுடனான சான்றிதழ் பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியனவற்றின் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
04. மேற்படி பதவிகளுக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்க சட்ட திட்டங்களுக்கமைய உரிய பிணையினை செலுத்துதல் வேண்டும்.
05. முழுமையாக பூரணப்படுத்தப்படாததும் தகைமைகளற்றதும், விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

#### விண்ணப்பிக்கும் முறை

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத்தலைமை காரியாலயத்தில் பெற்று பூரணப் படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்கான விண்ணப்ப பெயரினைக் குறிப்பிட்டு **" தலைவர் தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) பருத்தித்துறை வீதி கொடிகாமம்."** என்னும் முகவரிக்கு **06.03.2026** ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

21.02.2026 (C-5028) தலைவர்


## அலுவலக தளபாடங்கள் விற்பனைக்குண்டு

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் கிளைக் காரியாலயம் – மன்னார்

முகவரி : இல.87, வேளாங்கண்ணி வீதி, சாவற்காடு, மன்னார்.

மேற்படி முகவரியில் அமைந்துள்ள எமது காரியாலயத்தில் தளபாடங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. எதிர்வரும் பெப்ரவரி 23 ஆம் திகதியில் இருந்து பார்வையிடலாம்.

பார்வையிடும் நேரம் :
திங்கட்கிழமை – வெள்ளிக்கிழமை வரை
9.00 a.m – 4.00 p.m

(6886)

076 653 4410, 076 699 2366


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியை திருமதி.மகாநந்நகுமாரி மதியழகன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் **வைத்திலிங்கம் கனகரத்தினம்**



அவர்கள் கடந்த (19.02.2026) வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்.....

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை

(C-5030)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
நடராசா சடாதரன்
(முன்னாள் ஆசிரியர் – யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5026)

இறுதி வணக்கத்தினை சமர்ப்பிக்கும்
2002 O/L, 2005 A/L பழைய மாணவர்கள்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஏற்காத சட்டங்களை ஒரு போதும் திணிக்க மாட்டோம்



## உறுதிபடத் தெரிவித்தார் நீதி அமைச்சர்

**(கொழும்பு) மக்கள் ஏற்றுக்கொள்ளாத, அவர்களால் கையாளமுடியாத சட்டங்களை நாம் மக்கள்மீது திணிக்கமாட்டோம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்தார்.**

புதிதாகத் தயாரிக்கப்பட்ட பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவைப் பகிரங்கமாக வெளியிட்டு, பொதுமக்களிடமிருந்து அதுகுறித்த அபிப்பிராயங்களைப் பெற்றிருக்கிறோம். அவற்றின் அடிப்படையில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மீண்டும் அவ்வரைவு மக்கள் பார்வைக்கு வெளியிடப்படும் என அவர் தெரிவித்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் வகையில் அரசாங்கத்தினால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவானது சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறு அமையவில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர்கள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இயங்கிவரும் மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் தீவிர கரிசனைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவ்வரைவு தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை அனுப்பிவைப்பதற்கு நீதிய மைச்சினால் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டிருந்த பொதுமக்கள் கருத்தறியும் காலப்பகுதி இன்னும் ஒரு வாரகாலத்தில் முடிவுக்கு வரவுள்ளது.

"மக்கள் ஏற்றுக்கொள்ளாத, அவர்களால் கையாளமுடியாத சட்டங்களை நாம் மக்கள்மீது திணிக்கமாட்டோம்.


புதிய சட்டங்களை உருவாக்கி, எமது ஆட்சிக்காலத்தில் நாம் இத்தனை சட்டங்களை உருவாக்கினோம் எனப் பெருமிதம் கொள்ளவேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

மாறாக எந்தவொரு சட்டம் உருவாக்கப்பட்டாலும், நாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பன உறுதிப்படுத்தப்படும்.

நாம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவோம் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தோம். அவ்வாக்குறுதியை நிறைவேற்றுவோம். ஆனால் உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல் போன்ற சம்பவங்கள் எவ்வகையிலும் ஏற்புடையவை அல்ல. அவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்கும், பயங்கரவாத செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் "பயங்கரவாதம்" எனும் பதம் மிகவும் குறிப்பாக வரையறை செய்யப்பட்ட, சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறான சட்டமொன்று அவசியமாகும். மாறாக புதிய சட்டத்தைக் கொண்டுவந்து எந்தவொரு தரப்பினரையும் ஒடுக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. பொதுமக்களின் சுதந்திரம் எப்போதும் பேணப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

# சட்டங்கள் வலுவிழந்தால் மீண்டும் புலிகள் எழுச்சி பெறக்கூடும்

## சர்வதேச பயங்கரவாதத்துறை நிபுணர் றொஹான் குணரத்ன



(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டு வரப்படும் சட்டமூல முன்மொழிவு நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று சர்வதேச பயங்கரவாதத்துறை நிபுணர் றொஹான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை வலியுறுத்தியுள்ளார். காலத்துக்குக் காலம் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கப் போவதாக அறிவிக்கின்றன.

எனினும் அரசியலுக்கு அப்பால் தேசிய நலன் என்ற அடிப்படையில் குறித்த முன்மொழிவு வலுப்படுத்தப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இலங்கையில் சட்டங்கள் வலுவிழக்கும்போது, அவர்கள் எழுச்சி பெறக் கூடும்.

அத்துடன் விடு தலைப் புலிகளின் செயற்பாடு கள் வெளிநாடுகளில் வலுப்பெற்றுள்ளன.

எனவே அரசாங்கம் புதிய சட்டத்தின்மூலம் இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் என்றும் றொஹான் குணரத்ன வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் பயங்கரவாத செயற்பாடுகள் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்டுள்ளமையால், அது தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவர் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (நி)

# மாகாண சபைத் தேர்தல் ஆராய குழு நியமனம்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையின் கீழ் நடத்த வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும், அது தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை முன்வைக்கவும் பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகம் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கூடிய போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இந்தக் குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான முனீர் முலாஃபர், சுனில் வடகல , அருண் ஹேமச்சந்திரா, ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், லக்ஸ்மன் நிபுணஆராச்சி, சாணக்கியன் இராஜபுத்திரன் இராசமாணிக்கம் , சமன்மலி குணசிங்க, தர்மப்பிரிய விஜேசிங்க, சந்தன சூரியஆராச்சி , நிசாம் காரியப்பர் ஆகியோர் இந்த குழுவில் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பல நாடுகளின் அரச தலைவர்களை சந்தித்து கலந்துரையாடிய ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல நாடுகளின் அரச தலைவர்களை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.

புது டில்லியில் நடைபெற்றுவரும் AI Impact 2026 உச்சிமாநாட்டில் பங்குபற்றியுள்ள நிலையில், இந்த அரச தலைவர்களுக்கு இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

அதற்கமைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் ஆகியோருக்கு இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தை பிற்பகல் நடைபெற்றது. அதேநேரம், பிரேசில் ஜனாதிபதி லூலா த சில்வாவையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அபுதாபியின் முடிக்குரிய இளவரசர் ஷேக் காலித் பின் முகமது பின் சயீத் அல் நஹ்யான் உம் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் பூட்டான் பிரதமர் ஷெரிங் தொப்கேவுக்கும் இடையிலும் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலைகளின் நெரிசலை குறைக்க வீட்டுக் காவல்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நிலவும் நெரிசலை நிவர்த்தி செய்யும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, சந்தேக நபர்களை காவலில் வைப்பதற்குப் பதிலாக வீட்டுக் காவலில் வைக்க அனுமதிக்கும் சட்டத்தை இலங்கை அரசாங்கம் உருவாக்கி வருவதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டின் சிறைச்சாலைகள் சுமார் 10,500 கைதிகளை அடைக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளன. தற்போது அவை கிட்டத்தட்ட 39,000 பேரை அடைத்து வைக்கின்றன.

இவற்றில் முக்கிய பிரச்சினை என்னவென்றால், தண்டனை விதிக்கப்படாத அதிக எண்ணிக்கையிலான தடுப்புக் கைதிகள். போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சுமார் 20,000 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை உட்பட, சுமார் 28,000 கைதிகள் தடுப்புக் காவலில் உள்ளனர்.

இந்த நிலையில், நீதிபதி யசந்த கோடகொடவின் வழிகாட்டுதலின் கீழ் தயாரிக்கப்படும் முன்மொழியப்பட்ட சட்டம், சந்தேக நபர்களை சிறையில் அடைப்பதற்குப் பதிலாக, பொருத்தமான வழக்குகளில் வீட்டுக் காவலில் வைக்க நீதிமன்றங்கள் அனுமதிக்கும்.

இதனால் சிறைச்சாலைகளில் கைதிகளின் நெரிசல் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## வெடிகொளுத்த...

இருந்தால் சபைக்கு 10 ஆயிரம் ரூபா கட்டணம் செலுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மானிப்பாய் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் க.ஜெசீதன் தலைமையில் இடம்பெற்ற நிலையில் இந்த பிரேரணையை தவிசாளர் கொண்டுவந்த நிலையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் தவிசாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

மரணச் சடங்குகளின் போது வீதிகளில் வெடி வெடிப்பதால் வீதிகள் அசுத்தமடைகின்றன. அவற்றை பிரதேச சபையே சுத்தம் செய்ய வேண்டிய தேவையுள்ளது. எனவே அந்தக் குப்பைகளைச் சுத்தம் செய்வதற்காக நாங்கள் குறித்த வெடிகளை வெடிப்பவர்களிடமிருந்து 10 ஆயிரம் ரூபா கட்டணமாக வசூலிக்க வேண்டும்.

அவர்கள் எமது பிரதேச சபைக்கு 10 ஆயிரம் ரூபா செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னரே வெடிகளை வெடிக்க வேண்டும் என்றார். (ம-7,104)

## அபிவிருத்தி...

கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க மற்றும் பிரதி அமைச்சர் ஜனித ருவான் கொடித்துவக்கு ஆகியோர் நேற்று காங்கேசன்துறை துறைமுகத்தைப் பார்வையிட்டனர்.

அமைச்சர்கள் உள்ளிட்ட குழாம் துறைமுகத்தை பார்வையிட்டதுடன் , எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் கிராமப்புறங்களிலுள்ள இளையோரிடத்திலும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை சார்ந்த கல்விகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பரந்தளவிலான செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கும், இத்துறை மீதான ஈர்ப்பை இளையோரிடத்தில் தூண்டும் வகையில் பலாலி விமான நிலையத்தில் விசேட காட்சிக்கூடமொன்றை நிறுவுவதற்கும் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இந்திய முதலீட்...

எடுக்கப்படும் என இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வடக்கு ஆளுநரிடம் உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானி கராலயத்தின் பிரதி உயர்ஸ்தானிகர் சத்யஞ்சல் பாண்டே மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய் முரளி ஆகியோர், வடக்கு மாகாண ஆளுநரை நேற்று வெள்ளிக்கிழமை (20.02.2026) காலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின் போது, இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளின் அபிவிருத்தி மற்றும் காரைநகர் படகுத் தள அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆளுநருடன் பிரதி உயர்ஸ்தானிகர் கலந்துரையாடினார்.

அண்மையில் ஏற்பட்ட டித்வா பேரிடரின் பின்னரான உதவித் திட்டங்கள் குறித்தும், இந்தியாவின் 'அயலவருக்கு முன்னுரிமை' என்ற கொள்கையின் அடிப்படையிலான முன்னுரிமைகள் தொடர்பிலும் பிரதி உயர்ஸ்தானிகர் ஆளுநருக்குத் தெளிவுபடுத்தினார்.

அத்துடன், கடன்களாக வழங்கப்பட்ட சில உதவித் திட்டங்கள் தற்போது நன்கொடைகளாக மாற்றப்பட்டுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், வடக்கு மாகாணத்தில் புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், இந்திய முதலீட்டாளர்களை இங்கு முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறு ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதி உயர்ஸ்தானிகர், முதலீட்டு வலயங்கள் தொடர்பான கொள்கை நிலைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்ட பின்னர், இந்திய முதலீட்டாளர்களை நிச்சயம் வடக்கில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்க முடியும் என உறுதியளித்தார். (ம-7)

## "சமஷ்டி" அரசி...

இதற்கு இந்திய அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகரிடம் வலியுறுத்தியது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதி உயரஸ்தானிகர் சத்தியஞ்சல் பான்டே மற்றும் யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரகத்தின் துணைத்தூதர் (கொன்சூலர் ஜெனரல்) சாய் முரளி ஆகியோருக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையில் நேற்றுக் காலை 11:30 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் பிரசாரச் செயலாளர் நடராஜர் காண்டீபன் மத்தியகுழு உறுப்பினர் தீபன் திலீசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த சந்திப்பின்போது தமிழ் மக்களது அபிலாசைகளைப் புறக்கணிக்கும் அரசியலமைப்பை தடுத்து நிறுத்துவதற்கு இந்திய அரசு இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டது.

மேலும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடிய தீர்வு எட்டும் வகையில் 'சமஷ்டி' அரசியலமைப்பு கொண்டுவரப்படல் வேண்டும். அதன் மூலமே தமிழ் பகுதிகளில் பௌத்த சிங்கள மயமாக்கல், ஆக்கிரமிப்புக்கள், இனப்பரம்பலை மாற்றும் செயற்பாடுகளிலிருந்து தமிழ்த் தேசத்தின் இருப்பை பாதுகாக்க முடியும் என்றும் அதற்கான அழுத்தங்களை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் அநுர அரசின் ஆட்சியிலும் தமிழர் தாயகத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ள பௌத்த சிங்களமயமாக்கும் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த இந்திய அரசு இராஜதந்திர ரீதியிலான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிரால் வலியுறுத்தப்பட்டது. (ம-7,104)


## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

### பளைநகர பேருந்து தரிப்பிட மேல்மாடிக்கடை இல BUS - 05 நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2026

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- | 23.02.2026 தொடக்கம் 08.03.2026 வரை (அலுவலக நேரம் ) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- | 09.03.2026 பிற்பகல் 2 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- | 09.03.2026 பிற்பகல் 2 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம் |

**பேருந்து தரிப்பிட மேல்மாடிக் கடைக்கான கேள்வி அட்டவணை.**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | BUS - 05 | 1,032,000.00 | 15,500.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்)
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 09.03.2026 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரசஉத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06. நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும். குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
07. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
08. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
09. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சுப்பிரமணியம் சுரேன், 21.02.2026.
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை. (C-5027


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலை வளாகத்திற்குள் வெற்றிலை துப்பினால் சட்ட நடவடிக்கை!



## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வைத்தியசாலை வளாகத்தில் தடைசெய்யப்பட்டுள்ள வெற்றிலை பாவனை இனி வரும் காலங்களில் மீறப்படுமாயின் சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்காக அனுப்பப்படுவார்கள் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தின் பொது இடங்களை பாதுகாக்கும் விதிமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிகாட்டுதல்களுக்கு அமைவாக, வைத்தியசாலை வளாகத்தில் வெற்றிலைப் பயன்படுத்துதல் மற்றும் எச்சில் துப்புதல் முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது.

இனிவரும் காலங்களில் இத்தடை மீறப்படின் சம்பந்தப்பட்டவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்காக அனுப்பப்படுவார்கள் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தினசரி பல்லாயிரக் கணக்கான நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் வருகை தரும், மிகுந்த நெரிசல் கொண்ட சுகாதார நிலையமாகும்.

இவ்வளவு பெரும் மக்கள் வருகையுள்ள சூழலில் வைத்தியசாலையை சுத்தமாகவும் சுகாதாரத் தரநிலைகளுக்கு இணங்கவும் பேணுவது எங்களின் முதன்மை பொறுப்பாகும்.

இத்தகைய நோக்கத்துடன், நூற்றுக்கும் மேற்பட்ட சுத்திகரிப்பு தொழிலாளர்கள் தினமும் இரவு பகலாக பணியாற்றி, வார்டுகள், நடைபாதைகள், கழிப்பறைகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளையும் மிகுந்த தூய்மையுடன் பராமரித்து வருகின்றனர். அவர்களின் அர்ப்பணிப்பு சேவையால் வைத்தியசாலை சுத்தமான சூழலை நிலைநிறுத்தி வருகிறது.

ஆயினும், சிலர் வெற்றிலைப் பயன்படுத்தி எச்சில் துப்புவதன் மூலம் வைத்தியசாலை வளாகத்தில் அசுத்தமும் அசௌகரியமும் ஏற்படுகிறது. இது சுகாதாரத் தரநிலைகளுக்கு முரணானதோடு, நோயாளிகள் மற்றும் பார்வையாளர்களின் நலனுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

இதுகுறித்து பல அறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் வைத்தியசாலை முழுவதும் பதியப்பட்டுள்ளன.

எனவே இந்த வைத்தியசாலை உங்கள் அனைவரின் வைத்தியசாலையாகும். அதனை சுத்தமாகவும் சுகாதாரமான சூழலூடனும் பாதுகாப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.

இத்தகைய செயல்களில் இருந்து முழுமையாக விலகி, சுத்தம் மற்றும் ஒழுங்கை பேணுவதில் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவித்தார். (3)

# அனைத்து முதியோர் இல்லங்களும் மார்ச் இறுதிக்குள் பதியப்பட வேண்டும்

## அரசாங்க அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பதிவு செய்யாது இயங்கி வரும் முதியோர் இல்லங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு யாழ்.அரசாங்க அதிபர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த முன்னேற்ற கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கடந்த வருடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதியோர் சேவைகள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 2026 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யாது இயங்கி வரும் முதியோர் இல்லங்கள் அனைத்தும் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்துடன் உரிய ஆவணங்களை இணைத்து பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் எதிர்வரும் மார்ச் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என அரசாங்க அதிபரினால் அறிவுறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் முதியோர் சேவைகள் தொடர்பிலான உரிய உத்தியோகத்தர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறியப்பட்டு அதற்கான தீர்வுகளும் அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டன. (3-33)

# இலவச சட்ட ஆலோசனை மன்னாரில் இன்று

(சாவகச்சேரி)

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலவச சட்ட ஆலோசனை செயற்றிட்டம் இன்று சனிக்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்தில் காலை 9 மணிமுதல் மாலை 3.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதன்போது சட்ட ஆலோசனை தேவைப்படுபவர்கள் வருகை தந்து சட்டத்தரணிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு இலவசமாக சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சட்ட ஆலோசனை தேவைப்படும் விடயம் தொடர்பான ஆவணங்கள் ஏதும் இருப்பின் அவற்றை எடுத்து வரும்படியும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

குடும்ப வன்முறை தொடர்பான வழக்குகள், பாலியல் மற்றும் பால்நிலை தொடர்பான பிரச்சினைகள், காணிப் பிணக்குகள், பொருளாதார உரிமைகள், சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகள், விசேட தேவையுடையோர் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் திருநர் சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கு இலவச சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-30)

## தூரின் நகரக் குதிரை திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண திரைப்படக் கழகத்தின் ஏற்பாட்டில் புகழ்பெற்ற ஹங்கேரிய நெறியாளர் பெலா ற்ரார் நினைவாக "தூரின் நகரக் குதிரை" எனும் 24 ஆவது திரைப்படக்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எங்கட புத்தகங்கள் இல்லத்தில் திரையிடப்படவுள்ளது. (3)

மூத்த ஊடகவியலாளரும் விரிவுரையாளருமான பொன்னையா விவேகானந்தனின் "இருப்பும் இடர்களும், அறிவோம் தமிழ்ப் பண்பாடு, நாடகங்கள் மற்றும் தமிழ்மொழிக் கல்வி" ஆகிய நான்கு நூல்களின் அறிமுக நிகழ்வு கடந்த புதன்கிழமை கிளிநொச்சி நகரில் தீபச்செல்வன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

(படம்:சுபேசன்)



## குருபூசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு, நல்லூர் வீதியில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு அபிஷேகம் மற்றும் திருமுறை ஓதல் என்பன இடம்பெற்று தொடர்ந்து, "நாவலரின் சமயப் பணி" எனும் தலைப்பில், தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தைச் சேர்ந்த சைவப் புலவர் ஜீவா ஷஜீவன் உரையாற்றவுள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள்

## தகவல்கள் மிக விரைவில் வெளியாகும்



**(கொழும்பு)**

**கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட சில திட்டமிட்ட குற்றக்குழு உறுப்பினர்களுடன் தொடர்புகளைப் பேணி வந்த அரசியல் வாதிகள் பற்றிய தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

பத்மே உள்ளிட்ட சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை அடுத்து, அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 30 தொலைபேசிகள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போதே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, குறித்த அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும், முழுமையான விசாரணைகளின் பின்னர் இது குறித்த தெளிவான விபரங்கள் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

# மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி ஆட்சியைப் பிடிக்கும் ஆசையில்லை

## மரிக்கார் எம்.பி

(கொழும்பு)

மக்களை நெருக்கடிக் குள்ளாக்கி ஆட்சியைப் பிடிக்கும் ஆசை தமக்கில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாம் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது உண்மை தான். ஆனால் நாட்டைச் சீரழித்து, மின்சார விலையை அதிகரித்து, எரி வாயு வரிசைகளை உருவாக்கி, மக்கள் வரிசைகளில் நின்று அவதிப்படும்போது ஆட்சியைப் பிடிக்கும் துரதிர்ஷ்டவசமான ஆசை எங்களுக்கு இல்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.


ஏனென்றால் ஒன்றை புரிந்து கொள்ளுங்கள், நாம் மொட்டுக்கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல நாம் ஐக்கிய மக்கள் சக்தி. எங்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் இல்லை, எங்களுக்கு எதிராக வழக்குகள் இல்லை, நாம் திருடவும் இல்லை. உங்களைப் போல பிறர் கீழே போட்டதைத் திருடி உண்டதும் இல்லை, பிச்சை எடுத்ததும் இல்லை. அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் எனத் தெரிவித்தார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3356


### விதுரன்




### அபிசன்




### தாரகன்




### மதுரா




### பானுயன்




### சர்வின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்த வருடத்தில் 23,000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

23,000 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் இந்த ஆட்சேர்ப்பு செயன்முறையை இந்த வருடத்திற்குள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதமரும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.


இதன் மூலம் தற்போது நிலவும் ஆசிரியர் பற்றாக் குறை மற்றும் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான சிக்கல்கள் கணிசமாகக் குறையும் என்று அவர் குறிப்பிட்டார். அதற்கமைய, திறந்த மற்றும் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் பரீட்சைகளை நடத்தி பட்டதாரிகளை இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பிரதமரின் தலைமையில் நடைபெற்ற கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்றத்தின் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஹேமாலி வீரசேகர, தொழிற்கல்வி பிரதி அமைச்சர் நலின் ஹேவகே, கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் (வைத்தியர்) மதுர செனவிரத்ன மற்றும் அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (நி)

# உடல் நலக்குறைவு கால அவகாசம் தேவை

## மைத்திரி விக்கிரமசிங்க கோரிக்கை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் மனைவி மைத்திரி விக்கிரமசிங்க, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்கு மூலம் வழங்குவதற்கு கால அவகாசம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உடல்நல குறைப்பாட்டின் காரணமாக மைத்திரி விக்கிரமசிங்க இன்று (நேற்று) முன்னிலையாக முடியாது என தெரிவித்துள்ளதாகவும், இரண்டு வார கால ங்கள் கால அவகாசம் கோரி யுள்ளதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது.

முன்னதாக மைத்திரி விக்கிரமசிங்கவை, குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இங்கிலாந்தின் வுல்ப் ஹாம்டன் பல்கலைக்கழக த்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற போது அரச பணம் விரயமாக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் மைத்திரி விக்கிரமசிங்கவிடம் விசாரணை நடத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வாகன கொள்வனவில் அவசரம் தேவையில்லை

## வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவுறுத்து

(கொழும்பு)

பொதுமக்கள் அவசரப் பட்டு வாகனங்களை கொள் வனவு செய்ய வேண்டாம் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் வாகன ங்கள் மீது எதிர்வரும் ஏப்ரல் 1, 2026 முதல் 2.5 வீத சமூக பாதுகாப்பு பங் களிப்பு வரி விதிக்கப்படவுள்ள நிலையில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே மேலும் கூறுகையில், புதிய வரி விதிப்பால் வாகனங்களின் விலையில் பெரிய மாற்றம் ஏற்படாது.

எனினும் கடந்த சில மாதங்களாக ஜப்பானில் வாகன விலை வீழ்ச்சி கண் டுள்ளது. அந்த விலைக் குறைப்பின் பலன் உள்ளூர் சந்தையில் பிரதிபலிக்கும் என்பதால், வரியினால் ஏற்படும் சிறு அதிகரிப்பு ஈடுசெய்யப்படும்.

இதன்படி 2.5வீத வரி என்பது வாகனத்தின் பெறுமதிக்கு ஏற்ப சுமார் 75,000 முதல் 100,000 ரூபா வரை மட்டுமே மேலதிகமாக இருக்கும் எனக் கணிப் பிடப்பட்டுள்ளது. தற்போது பல தனிநபர் இறக்குமதியாளர்கள் வரி செலுத் துவதைத் தவிர்க்கின்றனர்.

எனினும், புதிய முறை யில், வாகனங்களைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கும் முன்பே துறை முகத்தில் வரியைச் செலுத்த வேண் டும். இதனால் அரச வருமானம் அதிகரிப்பதுடன், பதிவு செய்யப்பட்ட மற்றும் செய்யப்படாத அனைத்து இறக்குமதியாளர்களும் சம மாக வரி செலுத்துவது உறுதிச் செய்யப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

விதையனைத் தும் விருட்சமே செயற்றிட்டமும் கருகம்பனை பொது அமைப்புக்களும் இணைந்து நடத்தும் மாபெரும் இரத்த தான முகாம் நிகழ்வானது நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (3)


மணமகன் தேவை

1993 சதயம்

எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்

075 392 1524

076 655 9480

(6883)


# கோழி இறைச்சி, முட்டை விலை அதிகரிப்பு

## நுகர்வோர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சந்தையில் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

அந்த வகையில் சந்தையில் ஒரு முட்டை 35 ரூபா விற்கும் அதிகமான விலையில் விற்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை பல்பொருள் அங்காடிகளில் ஒரு முட்டை 55 - 60 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக தெரியவருகிறது.

இதேநேரம் சந்தையில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி 1300 ரூபாவிற்கு அதிக விலையில் விற்கப்படுவதாக தெரியவருகிறது.

விநியோகஸ்தர்கள் விலைகளை அதிகரித்ததால், அதிகரித்த விலையில் விற்க வேண்டியுள்ளதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

மேலும் இந்த நாட்களில் சந்தையில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளின் விநியோகத்தில் பற்றாக்குறை இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். (நி)

# புதுக்குடியிருப்புப் பகுதியில் கஞ்சாவுடன் பெண் கைது

(கிளிநொச்சி)

மாவட்ட புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 6.5 கிராம் கஞ்சாவுடன் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.அடசூரியவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின்படி மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இந்த கைது இடம் பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரம் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் தனது வீட்டில் விற்பனை நோக்கத்திற்காக 6.5 கிராம் கஞ்சா வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் அவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (3-299)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா தொடர்பான கலந்துரையாடல்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா எதிர்வரும் 25 ஆம் திகதி விளக்கு வைத்தலுடன் ஆரம்பமாகி ஏப்ரல் 1 ஆம் திகதி பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

பொங்கல் விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

நாகதம்பிரான் ஆலய முன்றலில் முற்பகல் 10 மணிக்கு ஆலய பூசை வழிபாடுகளை தொடர்ந்து ஆலய முன்றலில் மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு பிரதிப்பணிப்பாளர் துறை சார்ந்த திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் ஆலய தொண்டர்கள் எனப்பலர் பலந்து கொண்டனர். (3-315)


கண்ணீர் அஞ்சலி



பதிவாளர் நாயகம் திணைக்களம், வடக்கு வலய அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி அனித்தா அஜந்தன் அவர்களின் பாசமிகு தாயார்.

அமரர். கண்மணி சந்திரலிங்கம்

தோற்றம் 22.06.1965

மறைவு 19.02.2026

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-5025)

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பதிவாளர் நாயகம் திணைக்களம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமெரிக்க சுதந்திர தினம்

# ஏதிலிகளுடன் செலவிட பாப்பரசர் முடிவு



(வத்திக்கான்)

அமெரிக்காவின் 250 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளாமல் இத்தாலியின் லம்பேடுசா தீவிற்குப் பயணம் மேற்கொள்ளப் போவதாகப் பாப்பரசர் 14ஆம் லியோ அறிவித்துள்ளார்.

பாப்பரசர் 14ஆம் லியோ ஜூலை 4 ஆம் திகதியன்று அமெரிக்கா செல்லப் போவதில்லை என்பதை வத்திக்கான் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆபிரிக்காவிலிருந்து ஆபத்தான கடல் பயணம் மேற்கொண்டு வரும் ஏதிலிகள் தஞ்சம் புகும் முதல் இடமான லம்பேடுசாவிற்குச் சென்று, அவர்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவிக்கவுள்ளார்.

அமெரிக்காவில் ஏதிலிகள் நடத்தப்படும் விதம் குறித்து "ஆழ்ந்த சிந்தனை" அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளதாகச் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (நி)

# அமெரிக்கா ஈரானைத்

# பிராந்தியத் தளங்கள் எ

## ஐ.நாவிற்கு ஈரான் எச்சரி



**(டெஹ்ரான்)..................**

**ஈரான் மீது இராணுவ நடத்தப்பட்டால், இப்பிராந்திய "பகைமை சக்திகளின்" அ ணுவத் தளங்கள், வசதிக சொத்துக்கள் சட்டபூர்வமான க்க் கருதப்படும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.**

ஐ.நா பொதுச்செயலாளர் அந்டோனியோ குட்டெரெஸ் மற்றும் ஐ.நா பாதுகாப்பு பேரவைக்கு ஈரானின் தூதுவர் அமீர் சயீத் இரவானி நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

10 முதல் 15 நாட்களுக்குள் ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் குறித்து இணங்காவிட்டால், "மோசமான விளைவுகள்" ஏற்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்தப் பதில் வந்துள்ளது.

மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது போர்க் கப் விமானங் வரும் நி பேச்சுக்கள் இராணுவ அபாயத்தை என்று

# பாராலிம்பிக் போட்டிகளை புறக்கணிக்கும் உக்ரைன்

## சர்வதேச விளையாட்டு அரங்கில் வெடித்தது புதிய சர்ச்சை



(கீவ்)

மிலான் - கோர்டினா குளிர்கால பாராலிம்பிக் போட்டிகளில் ரஷ்ய மற்றும் பெலாரஸ் நாட்டு வீரர்கள் தங்கள் தேசியக் கொடியின் கீழ் போட்டியிட அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, உக்ரைன் அரசாங்கம் ஒரு அதிரடி முடிவை எடுத்துள்ளது.

ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த வீரர்கள் நடுநிலை வீரர்களாகப் போட்டியிடாமல், தங்கள் நாட்டுத் தேசியக் கொடிகளுடன் பங்கேற்கலாம் எனச் சர்வதேச பாராலிம்பிக் குழு அனுமதி அளித்துள்ளது. இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள உக்ரைன், மார்ச் 6ஆம் திகதி வெரோனாவில் நடைபெறவுள்ள தொடக்க விழாவைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது.

இது குறித்து உக்ரைன் விளையாட்டுத்துறை அமைச்சர் மேட்வி பிட்னி கூறுகையில், "விளையாட்டை போர் மற்றும் பொய்களுக்கான கருவியாக ரஷ்யா பயன்படுத்துகிறது பாராலிம்பிக் குழுவின் இந்த முடிவு மிகவும் ஆத்திரமூட்டும் செயல்" என்று சாடியுள்ளார்.

மேலும், உக்ரைன் அதிகாரிகள் யாரும் அதிகாரப்பூர்வ நிகழ்வுகளில் பங்கேற்க மாட்டார்கள் என்றும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார். (நி)



# ஏலியன்கள் தொட

# இரகசிய ஆவண

## வெளியிட ட்ரம்ப் உ



(வோஷிங்டன்)

ஏலியன்கள் குறித்த இரகசிய ஆவணங்களை வெளியிட ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

ஏலியன்கள் என அழைக்கப்படும் வேற்று கிரகவாசிகள் உலகில். இருப்பதாக பலரும் கூறி வந்தாலும், அது தற்போது வரை அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால் அமெரிக்கா வின் நெவேடாப் பகுதியில் உள்ள Area 51 என்னும் இடத்தில் வேற்றுகிரக வாசிகளை வைத்து அமெரிக்கா ஆராய்ச்சி செய்து வருவதாக நீண்டகாலமாகக் கூறப்பட்டது வந்தது.

சமீபத்தில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமா, "உலகில் ஏலியன்கள் இருக்க வாய்ப்புள்ளது.

ஆனால் நான் பார்த்தது

இல் குற எழு பதி கசி அ ஒரு யிரு இந் என உ தட் அ க யிட துவ பிற யிட் உ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...த் தாக்கினால் ...மது இலக்காகும்

### ...ரிக்கைக் கடிதம்

...வத் தாக்குதல் ...யத்தில் உள்ள ...னைத்து இரா ...கள் மற்றும் ...ா இலக்குகளா ...ன் ஐ.நாவிடம்



...கப்பல்கள் மற்றும் போர் ...ங்களைக் குவித்து ...நிலையில், ட்ரம்பின் ...கள் "உண்மையான ...வ ஆக்கிரமிப்புக்கான ...தைக் காட்டுகின்றன" ... ஈரான் கூறியுள் ளது.

ஈரான் போரை விரும்பவில்லை, ஆனால் தாக்குதல் நடத்தப்பட்டால் "தீர்க்கமான" பதிலடி கொடுக்கப்படும் என தெரிவித்துள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள் ளது. (நி)

## ...டர்பிலான ...ணங்கள்

### ...உத்தரவு

...இல்லை" எனக் கூறியது ஏலியன்கள் குறித்த விவாதத்தை மீண்டும் எழுப்பியது.

ஒபாமாவின் இந்த கருத்து குறித்து பதிலளித்த ட்ரம்ப், "அவர் அதை இர கசியத் தகவலிலிருந்து எடுத்தார், அவர் அப்படிச் செய்யக்கூடாது, அவர் ஒரு பெரிய தவறு செய்துவிட்டார்.

இந்த ஆவணங்களை வெளி யிடுவதன் மூலம் நான் அவரை இந்த சிக்கலில் இருந்து மீட்கலாம்" என தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்கா வசம் உள்ள ஏலியன்கள், பறக்கும் தட்டுகள் உள்ளிட்டவை குறித்த அனைத்து இரகசிய ஆவணங் களையும் பொது வெளியில் வெளி யிட சம்மந்தப்பட்ட அனைத்து துறைகளுக்கும் ட்ரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள பதிவில், "மக்களிடையே உள்ள அதீத ஆர்வத்தின் அடிப் படையில், வேற்றுகிரக வாசிகள், அடையாளம் காணப்படாத வான்வழி நிகழ்வுகள் மற்றும் அடை யாளம் காணப்படாத பறக் கும் பொருட்கள் தொடர் பான அரசாங்க கோப்பு களை வெளியிடும் செயல் முறையைத் தொடங்க தொடர்புடைய துறை களுக்கு வழிகாட்டுதல் வழங்கியுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணங்கள் எப்போது வெளியாகும், முழு ஆவணங்களையும் அமெரிக்கா வெளியிடுமா என சமூக வலைத்தளங் களில் அனைவரும் விவா திக்க தொடங்கிவிட்ட னர். (நி)



## எலும்பு உடையாதவரை தாக்கலாம்!

### குடும்ப வன்முறையை சட்டமாக்கிய தலிபான்கள்!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் 2021 முதல் தலிபான் ஆட்சி நடந்து வருகிறது.

தலிபான் அரசு பொறுப் பேற்றதில் இருந்து பெண் களின் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் சமூக உரிமைகளை நிராகரித்து பல கட்டுப்பாடுகள் விதிக் கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தற் போது குடும்ப வன்மு றையை தலிபான் அரசு சட்டப்பூர்வமாக்கியுள்ளது.

ஆளும் தலிபான் தலை வர் ஹிபத்துல்லா அகுந் சாதா புதிய சட்டத் தொகுப்பு ஒன்றில் கையெழுத்திட் டுள்ளார்.

புதிய சட்டத்தின் 9ஆவது பிரிவின்படி, ஆப்கான் சமூகம், மதத்தலைவர் கள், உயர்குடி, நடுத்தர வர்க்கம் மற்றும் அடித்தட்டு மக்கள் என நான்கு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள் ளது.

ஒரு குற்றத்திற்கான தண்டனை, குற்றவாளி எந்தச் சமூகப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப் படும்.

2009ஆம் ஆண்டு



பெண்களின் பாதுகாப்புக் காக கொண்டுவரப்பட்ட சட்டங்களை இந்தப் புதிய சட்டம் இரத்து செய்துள் ளது.

புதிய சட்டத்தின்படி, ஒரு ஆண் தனது வீட்டில் உள்ள பெண்ணையோ அல்லது குழந்தை யையோ தாக்கும்போது, இரத்தம் வராமலோ அல்லது எலும்பு முறிவு ஏற்படாமலோ இருந்தால், அது குற்றமாகக் கருதப் படாது.

அதாவது, வெளிப்படை யான காயங்கள் இல்லாத வரை எவ்வளவு வேண் டுமானாலும் வன்முறை யில் ஈடுபடலாம்.

ஒருவேளை கணவர் தாக்கியதில் எலும்பு முறிவு ஏற்பட்டு, அந்தப் பெண் நீதிமன்றத்தில் நிரூ பித்தால், கணவருக்கு வெறும் 15 நாட்கள் மட் டுமே சிறைத் தண்டனை விதிக்கப்படும். பாதிக்கப் பட்ட பெண் நீதிமன்றத் திற்குச் செல்ல வேண்டு மானால், அவருடன் கண் டிப்பாக ஒரு ஆண் வர வேண்டும்.

மேலும், நீதிபதியிடம் தனது காயங்களைக் காட்டும்போதுகூட உடல் முழுவதையும் மூடியிரு க்க வேண்டும்.

கணவனின் அனுமதி இன்றி ஒரு பெண் தனது உறவினர் வீட்டுக்குச் சென் றால், அவருக்கு 3 மாத சிறைத்தண்டனை விதிக் கப்படும் என்ற நிபந்தனை கள் விதிக்கப்பட்டுள் ளன. (நி)

## மணமகள் மீது பொழிந்த பணமழை

### விளாசித் தள்ளும் நெட்டிசன்கள்

(பஞ்சாப்)

பஞ்சாபில் நடந்த திரு மண விழாவில் மணம கள் மீது இலட்சக்கணக் கில் பணம் பொழியப்பட் டது.

இதுதொடர்பில் வெளி யான வீடியோ இணையத் தில் அதிக விமர்சனத்தை பெற்றது.

இப்படி நடக்க காரணம் திருமணத்தில் பஞ்சாபி கலாசாரப்படி, மணமக் களை வாழ்த்தி பணத்தை காற்றில் வீசி எறியும் ஒரு சடங்காகவே இது உள்ளது.

பஞ்சாபின் டர்ண் டரன் மாவட்டத்திலுள்ள பட்டி என்ற இடத்தில் பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தினத்தன்று நடைபெற்ற திருமணம் ஒன்றில் இந்த




சம்பவம் நடந்துள்ளது.

இந்த காணொளியில் மணமகள் மீது சுமார் எட்டரை கோடி ரூபாய் மதிப்பிலான ரூபாய்த் தாள்கள் வீசப்பட்டதாக கூறப்பட்டது. இதனால் பல விமர்சனங்களும் வந்தது.

பஞ்சாபி திருமணங் களில் இதுபோல இவர்கள் சடங்கு செய்ய காரணம் மகிழ்ச்சியை வெளிப் படுத்தவும், தீய சக்திகளை விரட்டவும் எனக் கூறப்படு கின்றது.

இதனால் இந்த சடங்கை அவர்கள் வழக் கப்படுத்தி வைத்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலோலி கிழக்கு சந்தாத் தோட்டம் அருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன் மணி) அம்பாள் ஆலய கொடியேற்றம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு பக்திபூர்வமாக இடம் பெற்றது.

# நாடகமும் அரங்கியலும் முழுநாள் பயிற்சிப் பட்டறை

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை நாளை 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் "கலைத்தூது கலையக" மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர் விபரங்களை யாழ்.திருமறைக்கலா மன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2393 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும். (3)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1991- இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>8இல்செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L , Manager(pvt)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/16566 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>7இல்சூரிசெவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc, German<br>எதிர்பார்ப்பு: Only German<br>தொ.இ: G/16583 |
| பிறப்பு:1980-இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>8இல்செவ்<br>கி-பா-97<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்- A/L, France<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்<br>தொ.இ: B/16567 | பிறப்பு-2002-இந்து<br>நட்சத்திரம்:உத்தராடம்<br>கி-பா-0<br>3இல்சூரிசெவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L, Work (pvt)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16585 |
| பிறப்பு:1982-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>7இல்செவ்<br>கி-பா-25 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:O/L, Shop<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16570 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>2இல்செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: NVQ Level-6<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16586 |
| பிறப்பு: 1991- இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>11இல்சூரிசெவ்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்-Engineer (German)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16571 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>1இல்செவ்<br>கி-பா -32<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்-BSc, Executive Officer<br>எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்<br>தொ.இ: G/16588 |
| பிறப்பு: 1983- இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>3இல் சூரிசெவ்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்: Machanic<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16572 | பிறப்பு-1992 - இந்து<br>நட்சத்திரம்-பூரம்<br>12இல்செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BEd, Teacher<br>எதிர்பார்ப்பு - விவாகரத்தானவர்<br>தொ.இ: G/16590 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 545



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இடது கைப் பழக்கம்

"அம்மா... என்னைத் தூக்கு!" என்று ஒரு குழந்தை கத்துகிறது.

உடனே அந்த அம்மா அந்தக் குழந்தையைத் தூக்கி இடுப்பிலே வைத்திருக்கிறார்.

எந்தப் பக்கம் வைத்திருக்கிறார்கள்?

இடதுபக்கம்! பொதுவாகக் குழந்தையைத் தூக்குபவர்கள் யாரும் வலது பக்கம் இடுப்பிலே வைத்திருப்பதில்லை!

விபரம் தெரியாத சில ஆண்கள் அப்படித் தூக்கி வைத்துக் கொண்டு அலைவது உண்டு. நீங்களும் பார்த்திருக்கலாம். இது ஒரு பக்கம் இருந்தாலும் ரொம்பக் காலமாகவே குழந்தைகளை இடுப்பிலே இடது பக்கமாக வைத்திக்கின்ற பழக்கம்தான் இருந்து வருகிறது.

இதற்கு ஆய்வாளர்கள் என்ன காரணம் சொல்கிறார்கள் தெரியுமா?

அப்படி இருந்தால்த்தான் குழந்தை சொல்வதை, குழந்தை நினைப்பதை தாயினாலே நன்றாக உணர முடியுதாம். இடது பகுதியை ஆட்சி செய்வது குறிப்பாக காதின் தலைமையகம் இருப்பது வலது பக்கம்தான்.

அதனாலே தாய், குழந்தைக்குப் பதில் சொல்லவோ, அது என்ன கேட்பதை சீக்கிரமாகப் புரிந்துகொண்டு நடக்கவோ அதுதான் சௌகரியம் என்கிறார்கள்.

இதனாலே தாய்க்கும் குழந்தைக்கும் நெருக்கம் அதிகமாகிறது. குழந்தைக்கும் பாதுகாப்பு அதிகம். அதுமட்டுமில்லை. ஒரு தாய், தன் குழந்தையை இடுப்பிலே சுமப்பதினாலே அவள் நினைப்பதை அவளுடைய இதயத்துடிப்பை குழந்தை உணருதாம்!

ஒன்பது மாதத்துக்கும் அதிகமாயிருந்த இடம் இல்லையா?

அதனாலே அவளைப் பற்றி நல்லா அறிந்துகொள்கின்ற வாய்ப்பும் குழந்தைக்குக் கிடைக்கிறது!

நம் முன்னோர்கள் ரொம்ப காலத்திற்கு முன்னாடியே வலது கையைப் பார்க்க ஆரம்பித்து விட்டார்களாம். அவர்கள் பயன்படுத்திய கல் ஆயுதங்கள் எல்லாம் வலது பக்கமாகத்தான் தீட்டப்பட்டிருக்கும்!

இப்படியெல்லாம் இருந்தும் இன்றைக்கு நம்மிலே பத்திலே ஒருவருக்கு இடதுகைப் பழக்கம் இருக்கு என்று சொல்கிறார்கள் நிபுணர்கள். ஆனாலும் இரண்டு கைகளும் ஒற்றுமையாக இருக்கத்தான் ரொம்பவும் முயற்சி செய்யுதாம்.

வலதுகைப் பழக்கம் உள்ளவர்கள். பேச, எழுத, செயற்படுத்தும் தலைமையகம் தலையின் பின்புறம் பிடரியில் இருக்கிறது.

இடதுகைப் பழக்கம் உள்ளவர்களுக்கு மூளையிலே இரண்டு பக்கங்களிலேயும் தலைமையகம் இருக்கிறது.

எத்தனையோ மேதைகள் இடதுகைப் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்! அமெரிக்க மேதை பெஞ்சமின் ஃபிராங்க்ளின், இத்தாலிய ஓவியர் லியானாடோ டாவின்சி, இப்படி நிறையப் பேர் இருந்தார்கள். இப்பவும் இருக்கிறார்கள்.

காலங்காலமாக இயல்பாகவே இடது கைப் பழக்கம் இருந்து வந்திருக்கிறது. அப்படி இருக்கும் போது வலது கை எப்போது இடது கையை வென்றது என்ற விபரம் இன்னமும் யாருக்கும் புரியவில்லை. உலகம் இடது பக்கமாகத்தான் சுற்றுகிறது.

வானத்திலே இருக்கின்ற வெள்ளி வீதி அணுவிலே இருக்கின்ற துணுக்குகள். உடலிலே உள்ள அமினோ அமிலம் இப்படி எல்லாமே இடது புறமாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு செய்திகள் இடதுகைக்கு ஆதரவாக இருக்கும்போது அது எப்படி வலதுகையிடம் ஏமாந்தது என்ற இரகசியம் இன்னமும் யாருக்கும் தெரியவில்லை! இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இது இன்னும் ஒரு பிரச்சினையாகத்தான் இருக்கு.

இப்படி இடது கை ஒதுங்கிக்கொண்டதாலே இப்போது எல்லாம் வலதுகைக்குத்தான் மரியாதை அதிகமாகிப் போனது.

ஒரு ஆசாமி இடது கையிலே கட்டுப் போட்டுக்கொண்டு வந்தார். "கையிலே என்னப்பா கட்டு?" என்று விசாரித்திருக்கிறார் ஒருவர். "ஒரு இயந்திரத்தை பிரித்து ரிப்பேர் பார்த்துக் கொண்டிருந்தேன். மறுபடியும் அதை ஓடவிட்டுப் பார்க்கும் போது இடதுகை விரல் மாட்டியது அதுதான் கட்டு!" என்றான் அவன். "நல்லவேளை வலதுகை மாட்டியிருந்தால் உன்னாலே சாப்பிடக்கூட கஷ்டமாகப் போய் இருக்கும்!" என்றார் அவர்.

அதற்கு இவன்... "முதலிலே வலதுகைதான் மாட்டிக்க இருந்தது. நான் தான் உடனேபுத்திசாலித்தனமாக அதை இழுத்துக்கொண்டு இடதுகையைக் கொடுத்தேன்!" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 ஆவது ஆண்டு நிறைவையொட்டி

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்





(தருமபுரம்)

வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் தமது உறவுகளைத் தேடி ஆரம்பித்த போராட்டம் 9 ஆவது ஆண்டு நிறை வடைகின்ற நிலையில், தமது உற வுகளுக்கு நீதி வேண்டி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உற வுகள் நேற்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந் தனர்.

கிளிநொச்சி நகர் சித்தி விநாயகர் ஆலயம் முன்பாக காலை 10.30 மணிக்கு ஆம்பித்த கவனயீர்ப்பு போராட டம் பேரணியாகச் சென்று டிப்போ சந்தி மீனாட்சி அம்மன் ஆலயம் முன்பாக நிறைவடைந்தது.

2017ஆம் ஆண்டு 2ம் மாதம் 20ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் தமது உறவுகளைத்தேடி கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

தொடர்ந்து சுழற்சி முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வரு கின்ற நிலையில் நேற்றைய தினம் 3287 நாட்கள் நிறைவடைந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-316)


உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு வெண்கரம் அமைப்பினால் வலிகாமம் மேற்கு பகுதிக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, கவிதை, கதைகூறல் மற்றும் பேச்சுப் போட்டிகள் என்பன நடத்தப்பட்டு வருவதுடன் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

# மாசிமக இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயத்தில் மாசிமக இலட்சார்ச்சனை விழா இடம்பெறவுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் மார்ச் மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை அம்பாளுக்கு விசேட அபிசேகமும் நவசக்தி அர்ச்சனையும் இடம் பெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை மாசி மகத் தினத்தன்று காலை 8.30 மணிக்கு அஷ்டோத்தரசத சங்காபிசேகத்துடன் ஆரம்பமாகி மாலை இலட்சார்ச்சனை பூர்த்தி இடம்பெற்று அம்பாளின் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 400 | 300 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 160 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 300 | 350 | 300 |
| தக்காளி | 150 | 150 | 200 | 200 | 150 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 | 150 | 110 |
| கோவா | 200 | 160 | 200 | 250 | 200 | 200 |
| கரட் | 250 | 380 | 400 | 400 | 350 | 320 |
| பூசணி | 100 | 100 | 100 | 150 | 100 | 100 |
| புடோல் | 150 | 200 | 150 | 250 | 200 | 150 |
| வாழைக்காய் | 200 | 180 | 150 | 250 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 200 | 230 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 200 | 150 | -- |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 600 | 350 | 400 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 400 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 280 | 200 | 300 | - | 230 |
| பயற்றங்காய் | 600 | 350 | 400 | 500 | 400 | 250 |
| லீக்ஸ் | 300 | 400 | 400 | 400 | 300 | 260 |
| பீற்றூட் | 300 | 150 | 200 | 250 | 200 | 180 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 600 | 400 | 550 |
| முருங்கைக்காய் | -- | -- | 4000 | 2800 | 2000 | -- |
| போஞ்சி | 400 | 300 | 400 | 350 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 300 | 250 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 80-140 | 150 | 100 | -- | 120 |
| தேசிக்காய் | 100 | 60 | 200 | 150 | 200 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 170 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 600 | 550 | 400 | 400 | -- | 350 |
| வெங்காயப்பூ | 100 | 80 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 100 | 100 | 70 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 150 | -- | 110 |

# இராசிபலன்

21.02.2026
மாசி 09, சனிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 2.18 மணிவரை

ரேவதி முன்னிரவு 8.21 மணிவரை
சுப நேரம் 3.31-5.01 மணிவரை
இராகுகாலம் 9.31-11.01 மணிவரை
சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
பூரம், உத்தரம்

வளவன்

**மேஷம்** தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம் பெறும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவா கும், உடல் நலனில் கவனம் தேவை.

**ரிஷபம்** பிரலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப் பதில் ஆர்வம் காட்டு வீர்கள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்** உறவினர்களும் நண் பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய தொழில் தொடரும் எண் ணம் உருவாகும், வருமானம் வளரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**கடகம்** முன்னேற்றம் பெற பெரி தும் பாடுவீர்கள், பிற இனத்தவர்களால் பெரு மைகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம்.

**சிம்மம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையலாம்.

**கன்னி** கேளிக்கை கொண்டாட் டங்களில் கலந்து மகி ழும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உரு வாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** நீண்ட நாளைய பிணக் குகளில் திசை திருப் பங்கள் ஏற்படலாம், கடன் பாக்கிகளை கொடுத்து தீர்க்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**விருச்சிகம்** காலைப் பொழுதே கல கலப்பான செய் திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந் தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொழில் ரீதியாக சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**தனுசு** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**மகரம்** உற்சாகத்தோடு செயற் படும் நாள், ஏட்டிக்கு போட்டியாக செயற்பட் டவர்கள் மனம் மாறுவார்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** பிரியமானவர்களின் சந் திப்பு இடம்பெறலாம், வாக்கு மேன்மையுண்டு, பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், செயற் பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**மீனம்** மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற் படுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும்.


வாங்கும் போது நண்பன் கேட்கும் போது பகைவன் ஆவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 4

காவியத் தொடர் 984





காரர்களோடு சேர்ந்திருப்பதாகச் சொன்னான். சோழர் குலத்தையே கருவறுத்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாகச் சொன்னான். அதற்காக, பிடியில் மீன் சின்னம் உள்ள கொலை வாள் ஒன்றை நீ வைத்துப் பூஜித்து வருவதாகவும் சொன்னான். கொள்ளிடக்கரைக் காட்டில் பள்ளிப்படையின் அருகில் யாரோ ஒரு சிறுவனை வைத்து மணிமகுடம் சூட்டியதாகவும் கூறினான்.

நந்தினி! அதையெல்லாம் நீ இனி மறந்துவிடு! சோழர் குலத்தின் பெருமைக்கெல்லாம் என்னைப் போல் உரிமையுள்ளவள் நீ. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வி. எங்கள் அருமைச் சகோதரி. உனக்கு இதுவரை செய்த அநீதிகளுக்கெல்லாம் பரிகாரம் செய்வதே எனது முதற் கடமையாக இனி வைத்துக் கொள்வேன்."

"தாங்கள் கூறிய செய்தி அவ்வளவு எளிதாக நம்பக் கூடியதா? சக்கரவர்த்தியின் குமாரியாகப் பிறந்து நான் இந்தக் கதியை அடைந்திருக்க முடியுமா? இவ்வளவு கொடுமையான துன்பங்களுக்கு உள்ளாகியிருக்க முடியுமா? வந்தியத்தேவன் கூறியது உண்மையாகவே இருக்கட்டும். இது மட்டுந்தான் அவர் சொன்னாரா? வேறு ஒன்றும் சொல்லவில்லையா?" என்றாள் நந்தினி.

கரிகாலர் சிறிது தயங்கிவிட்டு, "ஆம் இன்னொரு செய்தியும் சொன்னான். நீ பாண்டிய நாட்டுச் சதி

"ஐயா! இவ்வளவையும் தாங்கள் நம்புகிறீர்கள் அல்லவா? அப்படியிருக்கும் போது, கடம்பூருக்கு வந்து இத்தனை நாள் வரையில் காத்திருந்ததேன்? முன்னாடியே என்னைச் சந்தித்துப் பேச ஒரு முயற்சியும் செய்யாதது ஏன்?"

"என் மனத்தில் ஏற்பட்டிருந்த குழப்பந்தான் காரணம். நம்முடைய புதிய உறவை என் மனதில் நிலைப்படுத்திக் கொள்ள அவகாசமும் வேண்டியிருந்தது. எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லத்தக்க சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பலர் முன்னிலையில் சொல்லக் கூடிய செய்தியா இது? அதிஷ்டவசமாக, ஒரு காட்டுப்பன்றியும் ஒரு சிறுத்தைப் புலியும் இன்றைக்கு அத்தகைய சந்தர்ப்பத்தை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தன."

நந்தினி குறுக்கிட்டு, "ஐயா! காட்டு மிருகங்கள் பொல்லாதவைதான்! ஆனால் மனிதர்களைப் போல் அவ்வளவு கொடுமை செய்யக் கூடியவை அல்ல. இது இன்றைக்குத்தான் எனக்கு நன்கு தெரிந்தது" என்றாள்.

"சகோதரி! சென்று போனதையெல்லாம் மறக்க முடியுமா என்று சற்று முன்னால் நீ சொன்னாய். அதை நானும் ஒப்புக் கொண்டேன். மறக்க முடியாவிட்டாலும் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதற்கு நீ மறுமொழி சொல்லவில்லை."

"கோமகனே! தாங்கள் இதற்கு முன்னால் எனக்குச் செய்த துரோகங்கள், குற்றங்கள் எல்லாவற்றையும் மன்னித்து விடுவேன். ஒரு வேளை மறந்தும் விடுவேன். ஆனால் இன்றைக்குச் செய்த துரோகத்தை என்றைக்கும் மறக்கவும் முடியாது, மன்னிக்கவும் முடியாது."

"ஐயோ! இன்றைக்கு நான் என்ன செய்தேன்? நான் அறிந்து ஒரு துரோகமும் உனக்குச் செய்யவில்லையே?"

"சொல்லுகிறேன் அதோ வருகிறானே, அந்த தூர்த்தனைப் பாருங்கள்!"

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## உண்மை பேசும் திருடன்



நீதிபதி நன்னன் வழக்கம் போல ஒருநாள் நீதிமன்றத்தில் அமர்ந்திருந்தார். நான்கைந்து பேர் இளைஞன் ஒருவனைக் கட்டி இழுத்துக்கொண்டு அங்கே வந்தனர். அந்த இளைஞன் காண்போரைக் கவரும் அழகு வாய்ந்தவனாக விளங்கினான்,

அவர்கள், "நீதிபதி அவர்களே! இந்த இளைஞன் திருடும் போது எங்களிடம் கையும் களவுமாகப் பிடிபட்டான். தங்களிடம் இழுத்து வந்தோம். இளம் வயதினனான இவனைத் தாங்கள் தண்டிக்காமல் அறிவுரை கூறி அனுப்பினாலும் எங்களுக்குச் சம[illegible] சொன்னார்கள்.

அங்கிருந்த மற்றவர்களும் அவனைத் தண்டிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள்.

நீதிபதி அந்த இளைஞனைப் பார்த்துத் "திருடுவது தீமை எனவும் அப்படிப்பட்ட வாழ்வு கேவலமானது மட்டுமல்ல பாவமானதும் கூட எனவும் விளக்கிச் சொல்லிவிட்டு இனித் திருடாதே. இதுதான் உனக்குக் கிடைக்கும் கடைசி மன்னிப்பு" என்று கூறி அவனை விடுவிப்பார் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர்.

ஆனால் நீதிபதியோ அந்த இளைஞனிடம் அன்பாக பேசி அவனைக் கவர்ந்தார். "இனி எப்பொழுதும் வாழ்க்கையில் உண்மையே பேசுவேன் என்று வாக்குறுதி கொடு" என்றார்.

அப்படியே அவனும் உறுதி செய்துவிட்டு விடுதலை பெற்று வீட்டிற்குச் சென்றான்.

நடந்ததை அறிந்து எல்லோரும் ஏமாற்றம் அடைந்தனர்.

மறுநாள் இரவு திருட வேண்டும் என்ற எண்ணத்தில் இளைஞன் வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

"யாராவது தன்னைப் பார்த்து எங்கே செல்கிறாய் என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? எப்பொழுதும் உண்மையே பேசுவது என்று உறுதி எடுத்து விட்டோமே.

வெற்றி கரமாகத் திரும்பினாலும் மறுநாள் யாராவது கேட்டால் திருடியதை ஒப்புக் கொண்டாக வேண்டுமே. தண்டனையிலிருந்து எப் படித் தப்புவது?" என்று சிந்தித்தான்.

உண்மை பேச முயலும் தன்னால் இனித் திருட முடியாது என்ற முடிவுக்கு வந்தான். அன்று முதல் நல்லவனாக அவன் மாறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் புத்திஜீவிகள் அமைப்பு உருவாகுவது காலத்தின் தேவை

தமிழ் அரசியல் என்பது கடுமையாகப் பல வீனப்பட்டுள்ளது. தவிர, தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் எந்தவித கருசனையும் காட்டவில்லை.

அவர்களைப் பொறுத்தவரை பதவி மட்டுமே அவர்களுக்குத் தேவையானது. அந்தப் பதவி காரணமாக அவர்கள் ஒருவரை ஒருவர் அறுத்துக் கழுவுகின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் அரசியல்வாதிகள் எம் தமிழினத்தின் உரிமையைப் பெற்றுத் தருவார்கள் என நாம் நம்புவோமாயின் அதைவிட்ட அறியாமை வேறு எதுவுமாக இருக்கமாட்டாது.

அதேவேளை இருளைக் குறை சொல்லாதீர்கள். ஒளியை ஏற்றுங்கள் என்கிறது ஆங்கிலப் பழமொழி.

ஆம், தொடர்ந்தும் தமிழ் அரசியல் வாதிகளைக் குறைகூறுவதும் அவர்களின் சுயநலப் போக்குப் பற்றி விமர்சிப்பதும் எங்களிடம் இருக்கக்கூடிய பெரும் பலவீனமாகும்.

மாறாக, தமிழ் அரசியல்வாதிகளை ஓரங்கட்டிவிட்டு தமிழ்ப் புத்திஜீவிகள் தமிழ் மக்களின் விவகாரத்தை கையிலெடுக்க வேண்டும். அதற்காக புத்திஜீவிகள் அமைப்பு உருவாக வேண்டும். அந்த அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட குழு தொடர்ச்சியாக ஜனாதிபதி அநுரவைச் சந்திக்க வேண்டும்.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாட்சியை உலக நாடுகள் மதிக்கின்றன. அதற்குக் காரணம் கடந்த கால ஆட்சியாளர்களிடம் இருந்த பேரினவாத வெறித்தனம் ஜனாதிபதி அநுரவிடம் இல்லாமை ஆகும்.

உண்மை. எங்கள் நாட்டில் தூய்மையான அரசாங்கம் என்பது ஒருபோதும் சாத்தியமாகாது. எனவே ஒப்பீட்டு ரீதியில் எந்த அரசாங்கம் இனவாதத்தை தணிக்க முற்படுகிறதோ அந்த அரசாங்கத்துடன் இணங்கிச் சென்று நமக்கான தீர்வைப் பெற்றுக் கொள்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதுதான் புத்திசாலித்தனம்.

சிலவேளைகளில் அந்த முயற்சிகள் உடனடியாகப் பலனைத் தராவிட்டாலும் எங்கள் உரிமைக்கான எங்களின் தொடர் முயற்சியாக அது அமையும்.

ஆம், தமிழ் அரசியல்வாதிகள் பயனற்றவர்களாக – நம்பிக்கையற்றவர்களாக ஆகிய போது இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் பேசுவது யார் என்ற கேள்வி எழுகிறது.

இங்குதான் தமிழ்ப் புத்திஜீவிகள் அடங்கிய குழு ஜனாதிபதி அநுரவைச் சந்தித்து இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிப் பேச வேண்டும் – எங்களுக்கான தீர்வை முன்வைக்காமல் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்ற உண்மையை ஜனாதிபதி அநுரவிடம் எடுத்துக் கூறவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, எங்களின் உரிமை தொடர்பில் நாங்கள் விழிப்போடு இருக்கின்றோம். எங்களுக்கான உரிமை கிடைக்கும் வரை நாம் ஓயமாட்டோம் என்பதை நிலைத்த தன்மையுடையதாக ஆக்க வேண்டும். ஏனெனில் இது எங்களின் உரிமையை வென்றெடுப்பதற்குக் கட்டாயமானது.

# சட்டத்தரணிகளுக்கான பாதுகாப்பான சூழல் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## ஐ.நா. பிரதிநிதியிடம் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்

(கொழும்பு)

சட்டத் தரணிகளுக்கான சூழல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதியிடம் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரைச் சந்தித்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி, சட்டத்தரணிகளுக்கான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

அக்குரேகொட பகுதியில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை (13) இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் கொல்லப்பட்ட சம்பவம் நாடளாவிய ரீதியில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரியவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சேவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள சட்டத்தரணிகள் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்புத் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி, இச்சந்திப்பின்போது உரிய சட்ட செயன்முறையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம், சட்டத்தரணிகளுக்கான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துதல் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய வகையில் புதிய சட்டங்கள் தயாரிக்கப்படுவதில் சட்டத் தரணிகள் சங்கத்தின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மாணவர்களுக்கு ஒரே மாதிரியாக சிகையலங்காரம் செய்ய வேண்டும்

## வலி. தென்மேற்குப் பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கு ஒரே மாதிரியாக சிகையலங்காரம் செய்யவேண்டும் என தீர்மானிக்கப்பட்டதாக வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் க.ஜசீதன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே தவிசாளர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிகையலங்கார பிரச்சினையால் பல பாடசாலைகளில் அதிபர்கள் மாணவர்களை திருப்பி அனுப்புகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன. ஆகவே சாதாரண மானவர்களுக்கு சிகையலங்காரம் செய்கின்றது போல பாடசாலை மாணவர்களுக்கு சிகையலங்காரம் செய்யக்கூடாது.

ஆகவே எமது பிரதேசத்தில் இருக்கின்ற சிகையலங்கார சங்கத்துடன் நாங்கள் இதுபற்றிப் பேசுவோம். அவர்கள் நிச்சயமாக இதற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

ஏனெனில் அவர்களும் அதைத்தான் விரும்புகின்றார்கள். ஆகவே இந்தத் தீர்மானத்தின் மூலம் நாங்கள் அதனை இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்துவோம் என்றார்.

(ம-7,104)

# சுகாதாரப் புரள்வுடன் உணவு விற்பனை

## தண்டம் விதித்தது மன்று

(கரணவாய்)

சுகாதார புரள்வுடன் உணவுகளை கையாண்ட வர்த்தகர்களுக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதுடன் வர்த்தகர்கள் கடுமையாகச் எச்சரிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை சுகாதார அதிகாரி பணிமனைக்குட்பட்ட புலோலி பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் காலவதியான உணவு பொருட்களை விற்பனைக்கு வெளிக் காட்டியமை, புகையிலைசார் உற்பத்திப் பொருளான பீடியினை புகைத்த வண்ணம் உணவினை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமல் உணவினை கையாண்டமை போன்ற குற்றங்களுக்காக 4 வியாபார நிலைய உரிமையாளர்களிற்கு எதிராக புலோலி பொதுச் சுகாதார பரிசோகரான கந்தசாமி கிருஸ்ணரட்சகனால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்து க்கொள்ளப்பட்டது.

இதன்போது மன்றால் 60000 ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டது.

அதேவேளை பருத்தித்துறை எல்லைக்குட்பட்பட்ட வெதுப்பகமொன்றிலும் மற்றும் பல்பொருள் அங்காடியொன்றிலும் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனையின் பொருட்டு களஞ்சியப்படுத்தி வைத்திருந்த உரிமையாளர்களிற்கு எதிராக பருத்தித்துறை நகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் ப. தினேஸினால் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் வர்த்தகர்களை கடுமையாக எச்சரித்ததுடன் இருவருக்கும் முறையே 40 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் தண்டமாக விதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம்-7,60)

# முன்னேஸ்வரத்தில் பிரம்மோற்சவம்

பஞ்ச ஈஸ்வரத் தலங்களுள் ஒன்றானதும் ஸ்ரீ இராமபிரான் வியாசக மாமுனிவரால் பூஜித்துப் போற்றப்பட்ட புராதன சிவத்தலமுமான முன்னேஸ்வரத்தில் பிரம்மோற்சவமானது நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் இவ்வாலய பிரமோற்சவந்தனில் மாலை உற்சவங்களாக விக்கினேசானுக்கிரக உற்சவம், சந்திரகலாதர உற்சவம், ருத்யுஞ்ஜய உற்சவம், நடராஜ உற்சவம், சிவபக்த உற்சவம், திருக்கல்யாணம், பிக்ஷாடன உற்சவம், மிருகயாத்திரா உற்சவம், அஜபா நடன உற்சவம் என்பன முறையே விசேடமாக இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 02.03.2026 திங்கட்கிழமை காலை இரதோற்சவமும் மறுநாள் மாசிப் பௌர்ணமி நன்னாளில் தீர்த்தோற்சவமும் பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

28

என். சொக்கன்

அவருக்கு யார்மீதும் பெரிய மரியாதையோ, பயமோ இருப்பது போல் தெரியவில்லை. எதுவானாலும், அதில் தனக்கும் தன் நாட்டுக்கும் ஆதாயம் இருக்கிறதா என்பதைப்பற்றிமட்டும்தான் கவலைப்படுகிறார். அது இல்லை என்றாகிவிட்டால், அதற்காக யாரையும் பகைத்துக் கொள்ளத் தயங்க மாட்டார் போலிருக்கிறது.

கிட்டத்தட்ட இதேமாதிரியான குணங்கள் அமெரிக்காவுக்கும் உண்டு என்பதை அப்போது சிஐஏவுக்கு யாரும் எடுத்துச்சொல்லவில்லை. ஆகவே, "சதாம் உசேன் இந்தப் பகுதியின் தாதாவாக முயற்சி செய்கிறார் என்றுமட்டும் தங்கள் தலைமையகத்துக்கு ரிப்போர்ட் அனுப்பினார்கள்.

ஒருகாலத்தில் சிஐஏ இயக்குநராக இருந்த ஜார்ஜ் புஷ், இப்போது அமெரிக்காவின் துணை அதிபராக இருந்தார். அவருக்கு சதாம் உசேன் பற்றிய சகல சமாசாரங்களும் தெரிந்திருந்தது. சதாம் யார், எப்படிப்பட்டவர், வருங்காலத்தில் என்னவெல்லாம் செய்யக்கூடியவர் என்பதையெல்லாம், ஓர் உளவுத்துறை அதிகாரிக்கே உரிய லாவகத்துடன் ஊகித்துப் புரிந்துகொண்டிருந்தார் அவர்.

ஆகவே, அதிபர் ரொனால்ட் ரீகனை(Ronald Reagan) சந்தித்து, "சதாமை நம்பவேண்டாம்" என்று எச்சரித்தார் ஜார்ஜ் புஷ்.

இந்த எச்சரிக்கையை ரீகன் எந்த அளவு மதித்தார் என்பது தெரியாது. ஆனால், சதாம் உசேனால் தங்களுக்கு உடனடி ஆபத்து எதுவும் இல்லை என்பதே அப்போதைய அமெரிக்காவுக்குப் போதுமானதாக இருந்தது.

1990ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து, ஈராக் இராணுவத்தின் நடவடிக்கைகள் சற்றே சந்தேகத்துக்கிடமாக இருந்தன. சதாம் ஏதோ ஒரு திட்டத்துடன்தான் அவர்களைச் சில இடங்களில் மட்டும் குவிக்கிறார் என்று நினைத்தது சிஐஏ.

இத்தனை ஆண்டுகளாக சதாமைத் தொடர்ந்து காண்காணித்துக் கொண்டிருக்கிற அவர்களுக்கு, காரணமில்லாமல் இந்த எலி கோவணத்தோடு ஓடாது என்பது நன்றாகத் தெரிந்திருந்தது. ஆகவே, ஈராக் இராணுவத்தின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள்.

குவைத் எல்லையில் உள்ள கடற்பகுதியில்தான், ஈராக் இராணுவம் பலம் சேர்த்துக்கொண்டிருந்தது. இதைச் சுட்டிக்காட்டி, சதாம் குவைத்தை ஆக்கிரமிக்கக்கூடும் என்று அமெரிக்காவுக்குக் குறிப்பு அனுப்பியது சிஐஏ.

ஆரம்பத்திலிருந்தே. குவைத் ஓர் அமெரிக்க விசுவாசி தேசம். அதுமட்டுமின்றி குவைத்தை ஈராக் ஆக்கிரமித்துவிட்டால், அதனால் அமெரிக்காவுக்கும் சில பொருளாதார இழப்புகள் உண்டு.




ஆகவே, இந்த விடயத்தில் தலையிட்டாக வேண்டும் என்று தீர்மானித்தது அமெரிக்கா. ரீகனுக்குப்பிறகு அதிபராகியிருந்த ஜார்ஜ் புஷ், ஈராக்கின் அமெரிக்கத் தூதர் மூலம் சதாம் உசேனுக்குத் தூது அனுப்பினார். குவைத் விடயத்தில் உங்களுக்கு என்ன பிரச்சினையானாலும், பேசித் தீர்த்துக்கொள்ளலாம். இராணுவ நடவடிக்கைகள் எதுவும் வேண்டாம்.".

"குவைத் மேல் கையை வைத்தால், பல்லை உடைப்பேன்" என்பதுபோல் அமெரிக்கா நேரடியாக மிரட்டியிருந்தால்கூட சதாம் உசேன் தனது முடிவை மாற்றிக்கொண்டிருக்கமாட்டார். இந்த அறிவுரைகளெல்லாம் அவருக்கு எம் மாத்திரம்? சுருட்டிக் காது குடைந்தபடி, "நான் குவைத்தை ஆக்கிரமிக்கப் போகிறேனா? சேச்சே, யார் சொன்னது? அதெல்லாம் இல்லை" என்றார் அலட்சியமாக.

ஆனால், அவர் சொல்வது உண்மையில்லை என்பது அப்போது எல்லோருக்கும் தெரிந்த ரகசியமாக இருந்தது. "இன்னும் இருபத்து நான் நான்கு மணி நேரத்துக்குள், ஈராக் படைகள் குவைத்தினுள் நுழைந்து விடக்கூடும்" என்று அமெரிக்காவுக்குக் குறிப்பு அனுப்பியது சிஐஏ.

குட்டியூண்டு தேசம் குவைத் அதைப் பிடிக்கவேண்டுமானால், சதாமுக்கு ஒரு சின்னப் படைகூடப் போதும். ஆனால், ஆயிரக்கணக்கான ஈராக் துருப்புகள் அந்நாட்டை மெல்லச் சுற்றிவளைத்துக்கொண்டிருந்தன.

1990 ஒகஸ்ட் 1ஆம் திகதி, ஈராக் இராணுவம் குவைத்தைக் கைப் பற்றியது. அதனை ஈராக்கின் ஒரு பகுதியாக அறிவித்து விட்டா சதாம் உசேன். அதற்குமேல், அமெரிக்காவால் சும்மா இருக்கமுடியவில்லை. குவைத்தை விடுவிப்பதற்காக, அவர்களும் யுத்தத்தில் குதித்தார்கள்.

ஸ்கட், பாட்ரியாட் என்று ரகம்ரகமாக ஏவுகணைகள் பறந்த இந்த வளைகுடாப் போரில், அமெரிக்க இராணுவம்தான் கதாநாயகன், சிஐஏ வழக்கம்போல் திரைக்குப் பின்னாலிருந்து மட்டுமே உதவவேண்டியிருந்தது.

ஆனால், "வளைகுடாப் போர்" என்று வர்ணிக்கப்பட்ட இந்த யுத்தத்தில், சிஐஏவின் பங்கு மிக மிக முக்கியமானது. போரின் முடிவில், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் இதனை வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

சதாம் உசேனும் ஈராக் இராணுவமும் எந்த நேரத்தில் என்ன செய்யப்போகிறது என்பது கடவுளுக்கும் தெரியாத சமாசாரங்கள். ஆனால், ஒவ்வொருமுறையும், சிஐஏமட்டும் எப்படியோ அந்தத் தகவல்களைக் கொத்திக்கொண்டு வந்துவிட்டார்கள். ஈராக் வட்டாரங்களில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள், புகைப்படங்கள், சிஐஏ தலைமையகத்தில் நாள் முழுவதும் மெகாசீரியல்கள்போல் ஓடிக்கொண்டிருந்தன. இன்னும் தங்களது உளவாளிகள், ஒற்றர்கள், நவீனதொழில்நுட்பங்கள் என்று சகலத்தையும் பயன்படுத்தி, அமெரிக்க அரசாங்கம், இராணுவத்துக்குத் தேவையான விபரங்களை அவர்கள் தொடர்ந்து சப்ளை செய்து கொண்டிருந்தார்கள்.

முன்பெல்லாம். சிஐஏ தலைமை அலுவலகம் ஒரு நாளுக்கு ஒரு தகவல் அறிக்கைதான் தயார் செய்யும். மிஞ்சிப்போனால் இரண்டு, அதற்குமேல் அபூர்வம்.

ஆனால், வளைகுடாப் போர் நடந்தபோது, மணிக்கு ஓர் அறிக்கை என்கிற அளவில் தகவல்கள் வந்து குவிந்துகொண்டிருந்தன.

ஈராக் தரப்பில் என்ன நடக்கிறது என்பதை, டிவியில் நேரடி ஒளிபரப்புக் கிரிக்கெட் மேட்ச் பார்ப்பதுபோல் அமெரிக்கா உடனுக்குடன் தெரிந்து கொண்டு விடமுடிந்தது.

இதற்கு முக்கியக் காரணம், சதாம் உசேன் குவைத்தைப்பற்றி யோசிப்பதற்கு முன்பே ஈராக்முழுவதும் ஊடுருவியிருந்த சிஐஏ நெட்வொர்க்தான். தவிர, பல ஆண்டுகளாக சதாமின் இராணுவ நடவடிக்கைகளைப் பார்த்துப் பார்த்து, இந்த மனிதர் அடுத்து என்ன செய்வார் என்பதை ஓரளவு சரியாகவே கணிக்கக் கற்றுக்கொண்டிருந்தது சிஐஏ.

இதனால், ஈராக்கின் தரைப்படை வீரர்கள் நடமாட்டத்தில் தொடங்கி, பீரங்கிகள், ஏவுகணைகள், இவற்றையெல்லாம் தயாரிக்கிற இடங்கள், ஏவுதளங்கள் என்று எல்லா விவரங்களும் அமெரிக்காவுக்குக் கிடைத்துவிட்டது. ஒவ்வொன்றாகத் தேடிப் பிடித்து அழிக்க வசதியாக இருந்தது.

வளைகுடாப் போரின்போது சிஐஏ செய்த இன்னொரு முக்கியமான வேலை, சதாம் உசேனுக்கு ஆதரவாக யாரெல்லாம் வருகிறார்கள் என்பதைக் கண்காணித்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தரத்...

பெற்றது.

கல்லுண்டாயில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் ஒவ்வொரு மழைக் காலத்திலும் வெள்ளப்பெருக்குக் காரணமாக இடம்பெயரும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இதற்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஆளுநர், இது தொடர்பில் இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளையினரால் விசேட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தற்போது நிலம் நிரவுதல் தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலின்போது, அருகிலுள்ள கொத்துக்கட்டிக் குளத்தைத் தூர்வாரி, அங்கிருந்து பெறப்படும் மண்ணைப் பயன்படுத்தி கல்லுண்டாய் குடியேற்றப் பகுதியில் நிலம் நிரவுதல் வேலைகளை முன்னெடுப்பது குறித்தும் குடியேற்றத் திட்டத்துக்கு அண்மையாகச் செல்லும் வாய்க்காலைத் தூர்வாருவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், கொத்துக்கட்டிக்குளத்தைத் தூர்வாரியதன் பின்னர், எதிர்காலத்தில் அதன் பராமரிப்புப் பணிகளை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையிடம் கையளிப்பது தொடர்பான யோசனையும் இதன்போது முன்வைக்கப்பட்டது.

இவ்விடயங்கள் தொடர்பில் இலங்கை பொறியியலாளர் சங்கத்தின் வடக்கு மாகாணக் கிளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மற்றும் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் என்பன ஒன்றிணைந்து ஆராய்ந்து, அதற்கான துரித திட்ட மதிப்பீட்டு முன்மொழிவை விரைவில் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-7,104)

## காரைநகர்...

பகுதி ஆகிவற்றை துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க மற்றும் பிரதி அமைச்சர் ஜனித ருவான் கொடித்துவக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி உள்ளிட்ட குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர்.

அதன்போது, காரைநகர் - ஊர்காவற்றுறை இடையில் பாலம் அமைப்பது, துறைமுக அபிவிருத்தி, ஊர்காவற்றுறையில் இருந்து காரைநகர் கடற்கோட்டைக்குப் பயணிகள் செல்வதற்கான வழிவகைகள், துறைமுகத்திற்கு அருகில் பாவிக்கப்படாது காணப்படும் காணிகளை மக்களின் தேவைகளுக்குப் பயன்படுத்தல் மற்றும் எதிர்கால சுற்றுலா வசதிகளை மேம்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. (ம-7,33)

## வணிகத்துறை...

ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் நேற்றைய 2ஆம் நாளில் (20) முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகத்துறையில், மாணவி செல்வி தங்கராசா ஜஸ்மின் யூலிற்றா 7 தங்கப்பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா வியாழக்கிழமை (19) முதல் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கைக்கு...

'AI Impact 2026' மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையிலான தீர்க்கமான சந்திப்பு நேற்று நண்பகல் நடைபெற்றது.

புதுடில்லியிலுள்ள ஹைதராபாத் மாளிகையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த ஐக்கியத்துடன் வரவேற்றார்.

தனது அழைப்பை ஏற்று சர்வதேச செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் பங்கேற்றமைக்காக ஜனாதிபதி அநுரவுக்குப் பிரதமர் மோடி இதன்போது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

இரு தலைவர்களுக்கும் இடையிலான சுமுகமான கலந்துரையாடலைத் தொடர்ந்து, இரு நாட்டுத் தூதுக்குழுவினரும் பங்கேற்ற இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின.

இதன்போது இலங்கை - இந்தியா இடையிலான வரலாற்று ரீதியான உறவுகளைப் புதிய தளத்திற்கு இட்டுச் செல்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக பின்வரும் துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த இணக்கம் காணப்பட்டது.

* இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தடைகளை நீக்கி, முதலீடுகளை அதிகரித்தல்.

* செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளைப் பகிர்ந்து கொள்ளுதல்.

* நீண்டகாலமாகத் தொடரும் இரு நாட்டு கலாசார மற்றும் சமூகத் தொடர்புகளை மேலும் பலப்படுத்துதல்.

இலங்கையை அண்மையில் தாக்கிய "டித்வா" சூறாவளி அனர்த்தத்தின் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா வழங்கிய அவசர மனிதாபிமான உதவிகள் மற்றும் விசேட ஒத்துழைப்புகளுக்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இந்தியப் பிரதமருக்குத் தனது விசேட நன்றியைத் தெரிவித்தார்.

அயல் நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் இந்தியாவின் 'Neighborhood First' கொள்கையின் கீழ், இலங்கையின் இறையாண்மை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இதன் போது உறுதியளித்தார். (ம-7)

## சந்நிதி ஆலய...

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் வேண்டாம் அரசாங்கத்தினால் கொண்டு வரப்படும் புதிய சட்டமும் வேண்டாம் என்பதை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் ஒன்று நேற்று சந்நிதி முருகன் ஆலய முன்றலில் இடம்பெற்றது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள், குரல் அற்றோரின் குரல் அமைப்பு ஒருங்கிணைப்பாளர் கொட்டடி கோமகன், தமிழர் கலை மன்ற இயக்குனர் கமலகாந்தன் உட்பட பொது அமைப்பு பிரதிநிதிகள் இணைந்து கையொப்பம் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சந்நிதி முருகனைத் தரிசிக்க வந்த அடியவர்கள் பல நூற்றுக் கணக்கானவர்கள் ஆர்வத்துடன் கையொப்பமிட்டனர்.(ம-7,60)


மஹஜன சம்பத
திகதி 2026.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 6111
Z 8 9 1 0 7 6
அத சம்பத Z 1 0 7 6
சீட்டிழுப்பு இலக்கம் 0686
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 227
துலாம் 03 32 43 8269

தன நிதானய
திகதி - 2026.02.20
சீட்டிழுப்பு இலக்கம் - 2141
Q 33 78 79 81 Q
Double Chance

மெகா பவர்
திகதி 20/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2459
X 03 32 36 49 63

ஜய ஜய JAYA
திகதி 2026.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 0379
B 6 8 6 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4353
சீட்டிழுப்பு திகதி 20.02.2026
M 14 58 71 72
M

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.20
சீட்டிழுப்பு இலக்கம் 1420
விருச்சிகம் 27 55 57 61 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.02.2026 வெற்றி வாரம் 0819
ஆங்கில எழுத்து M மற்றும் வெற்றி இலக்கம் 8 6 2 0 5 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,808,069.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3085
சீட்டிழுப்பு திகதி 2026.02.20 தினம் வெள்ளிக்கிழமை
12 16 18 35 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.100,175,226.40

சனிதா
திகதி 20.02.2026 வெற்றி வாரம் 5246
05 21 53 65 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,610,855.60

சசிரி
வெற்றி வாரம் 915
சீட்டிழுப்பு திகதி 20.02.2026
வெள்ளிக்கிழமை
15 30 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,041,200.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4797
சீட்டிழுப்பு திகதி 20.02.2026 தினம் வெள்ளிக்கிழமை
02 31 39 58 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,397,840.40

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 02 39 41 49 73
2261
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.1,52,640,944.00
20.02.2026 வெள்ளிக்கிழமை

அட கோட்டிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2911
சீட்டிழுப்பு திகதி: 2026.02.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.92,015,408.80
01 66 69 72 R


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் மரணம்

(கொழும்பு)

இந்திய சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று நேற்று மாலை எட்டியாந்தோட்டை, ஹக்பெல் லாவகப் பகுதியில் வீதியை விட்டு விலகிப் பள்ளத்தில் கவிழ்ந்து அங்கிருந்த வீடொன்றின் மீது விழுந்துள்ளது.

இதில் குறித்த வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.(ம-7)


## முச்சக்கரவண்டிச் சாரதி தேவை

யாழ். நகரில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு முச்சக்கர வண்டிச் சாரதி தேவை.

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்

தொடர்பு : 076 097 3121

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டிப் பகுதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- 1½ பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 8 இலட்சம்
- நிலப்பரப்பு நல்ல சூழல்

(2070)

தொடர்பு : 076 990 3039



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378,

076 097 3127



## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

அமரா வீதியில்

- இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி 8 இலட்சம், பின்பகுதி 7 இலட்சம் மூன்றாம் பகுதி 6 இலட்சம்
- நாவற்குழி சந்தியில் இருந்து ½ கிலோ மீற்றர் தூரம்
- அமரா வீதி முகப்புடன்
- A9 வீதியில் இருந்து 250 மீற்றர் தூரம்

(2070)

தொடர்பு : 076 739 0413

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 194/= | Max 3Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 235/= | Max 3 Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 230/= | Max 3 Kg |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 195/= | |
| 1Kg கடலை | - 335/= | Max 3kg |
| 1Kg சோயா | - 250/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | ~~3000/=~~ |
| 1Kg குத்தரிசி ஆட்டக்காரி | - 265/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை | - 197/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 399/= | ~~480/=~~ |
| 01 மலிபன் பால்மா | - 1120/= | ~~1150/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 285/= | ~~330/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 40/= | ~~70/=~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.

(2071)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




19.02.2026 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 40ஆவது பட்டமளிப்பு விழாவில்

**சிறப்பு விஞ்ஞானமாணி**

(BSc Honours in Agriculture)

பட்டத்தைப் பெற்ற

**செல்வி சிவஞானம் திவ்வியா**

அவர்களை வாழ்த்துவதோடு இன்னும் பல பட்டங்களைப் பெற்று வாழ்க்கை சிறக்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

அம்மா, அப்பா - சிவஞானம் மாலினி

பேரன்மார்

சிவலிங்கம் - இரத்தினம்

புலேந்திரன் - நேசமலர்

கோபால் - திரவியம்

கரணவாய் வடக்கு, நாச்சிமார் கோவிலடி, வல்வெட்டித்துறை.

(2069)

## மாப்பிள்ளை தேவை

01. புங்குடுதீவு - வேலணை, இந்து, ரேவதி, 1992, Canada university, Graduate, canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (39709)
02. தெல்லிப்பழை - ஏழாலை, இந்து, 1994, சித்திரை, Regiterd nurse, Swiss citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (37402)
03. மானிப்பாய், இந்து, 1993, MBBS, LLB, Lawyer, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(37015)
04. தெல்லிப்பளை - நல்லூர், இந்து, 1994, பூரட்டாதி, MBBS, MO Doctor, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (36611)
05. திருநெல்வேலி, இந்து, 1998, உத்தராடம், MBBS, Doctor, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (36481)
06. மீசாலை - புலோலி, இந்து, 1993, அவிட்டம், BSc Hons, software Engineering, Singapore citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (34791)
07. அல்வாய் - கோப்பாய், இந்து, 1993, ரோகிணி, Phd lecturer, canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33627) (நிறைந்த சீதனம் உண்டு.)
08. புங்குடுதீவு - வேலணை, இந்து, 1992, பூரம், ACCA complete, Accountant, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33548)
09. காரைநகர், இந்து, 1992, பூராடம், MBBS Doctor, srilanka பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33307)
10. வேலணை, இந்து, 1992, ரேவதி, MBBS, Doctor, Srilanka பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32198)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

(6881)

S.Sharma J.P | 077 539 3728

www.thaalee.com | 076 528 4510

## பெண் ஊழியர்கள் தேவை

கோழிகள் மற்றும் தோட்டங்களைப் பராமரிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

திருநெல்வேலியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் 48 000 வரை வழங்கப்படும்.

(6887)

077 354 9140

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் - ஆயாக்கடவை பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நல்ல செம்மண் வளமுள்ள நன்றாகப் பராமரிக்கப்பட்ட காணித்துண்டுகள் 4 பரப்பு, 3 ¾ பரப்பு விற்பனைக்குண்டு.வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் ஏற்ற காணி.

(6879)

தொடர்பு:077 129 8159

## காணி விற்பனைக்குண்டு

நவக்கிரியில் 17 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தோட்டம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி. பிரித்தும் தரப்படும்.

வெட்டுக்கிணறு உண்டு

மின்சார வசதி உண்டு.

(6885)

தொடர்பு : 077 082 1010

## இலங்கையில் இருந்து கனடாவிற்கு

கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



10-19 Kg - 1000/Kg

20-49 Kg - 900/Kg

50Kg இற்கு மேல் - 800/Kg

DELIVERY ▸ 2-3 Months

எமது நேரடி கிளைகள்: திருகோணமலை, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, கோப்பாய், சுன்னாகம், கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், நெல்லியடி

(C-5031)

V2 TRAVELS 076 822 6244 076 455 0672

## வேலையாட்கள் தேவை

கணனி, சமூக வலைத்தள, தகவல் தொழில்நுட்பம், AI தொழில்நுட்ப பிரயோக அறிவுடைய ஆண், பெண் இருபாலாரும் தேவை.

(6890)

076 311 9485

## காணி, வீடு விற்பனை கொள்வனவு

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, கொழும்புத்துறை, தீவகம், மண்டைதீவு, நயினாதீவு, கொழும்பு மற்றும் பலாலி, A9, K.K.S, பருத்தித்துறை வீதிகளிற்கு அருகில் வீடு, காணி விற்கவுள்ள உரிமையாளர்கள் மற்றும் வாங்கவுள்ளவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

நாள் வாடகைக்கு வீடுகள் வழங்கப்படும் - 6000/=

(6890)

076 311 9485


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.